**மினிப்பே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 21 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 23 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் மினிப்பே பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முற்பணக் கணக்கில் ரூபா 44,137 ஆன வரவு மீதி செலவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | இத் தவரை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கூட்டுத் தொகை ரூபா 51,666,689 ஆன 04 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகளில் குறிப்பிடப்படும் மீதிகளிற்கிடையில், ரூபா 238,285 ஆன வேறுபாடு நிலவியது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். | இவ் வித்தியாசம் பற்றி கண்டறிந்து எதிர் வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 10,008,523 ஆனதுடன், 05 | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | 01 - 05 ஆண்டுகளிற்கு இடையிலான மீதிகளில் ரூபா 612,545 கிடைத்துள்ளதுடன், பெற வேண்டிய மீதிகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,214,491 ஆனது. | | அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 01 - 05 ஆண்டுகளிற்கு இடையிலான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,179,475 ஆனதுடன், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதிகள் ரூபா 2,459,906 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 05 ஆண்டுகளிற்கு குறைந்த மீதியில் ரூபா 646,598 தொகை செலுத்தப்பட்டுள்ளது எனவும், செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்த மற்றும் அங்கீகாரம் பெற்று பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) **கணக்காய்விற்கு தேவையான எடுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 124,303,547 ஆன 4 கணக்கு விடயங்களிற்குரிய உரிமையை உறுதிப்படுத்தும் ஒப்படைக் கட்டளை, கோவைகள் மற்றும் பதிவேட்டுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடு இருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர் வரும் ஆண்டில் சான்றுகளை முன்வைப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) 126 பிரிவு | 02 விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 57,125 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில் லை. | வருட ஆரம்பத்தில் கணிப்பாய்வொன் று செய்து வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தொகையை அறிவிட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக அறிவிக்கிறேன். |
| (ii) 149 பிரிவு | குருளுபொத்த வாடிவீட்டால் சுற்றுலா சபைக்கு சமர்பிக்கும் கணக்கு அறிகக்கை | சுற்றுலா சபைக்கு சமர்பிக்கும் கணக்கறிக்கை மீது வருமானம் | பட்டயம் பெற்ற கணக்காளர் ஒருவரின் அறிக்கை மீது 1 சதவீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீது 1 சதவீத வரையான அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்ள வேண்டும். | பெறப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டியதன் பின் அவ் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை ஒன்று சமர்பிக்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | 2018 ஏப்ரல் 24 திகதிய இலக்கம் 2018/04 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது சபைக்கு சொந்தமான 2 வாகனங்கள் ரூபா 562,021 பெறுமதிக்கு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. | பழுதுபார்க முன்னர் அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2:4:3 மற்றும் 2:8:1 பந்தி | சிறுவர் பூங்காவிற்கு ரூபா 2,361,036 பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்யும் தொழிநுட்ப ஆய்வுக் குழுவிற்கு மாகாண பொறியியலாளர் சமுகமளிக்காததுடன், தொழிநுட்ப ஆய்விற்கு விடய அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவரை சமுகமளிக்கச் செய்திருக்கவில்லை. | தொழிநுட்ப குழுவிற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களை சமுகமளிக்கச் செய்ய வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கணக்காளர் மாத்திரமே சமுகமளித்தார். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,316,477 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,860,375 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,365,804 | 1,381,450 | 785,727 | 595,723 | 1,332,892 | 1,332,892 | 929,810 | 403,082 |
| (ii) | வாடகை | 4,845,222 | 5,128,148 | 1,613,208 | 3,514,940 | 3,280,589 | 3,919,412 | 2,338,827 | 1,580,585 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,233,725 | 2,009,579 | 1,963,229 | 46,350 | 2,510,000 | 2,312,897 | 2,312,897 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,979,500 | 6,790,184 | 4,190,464 | 2,599,720 | 5,624,041 | 32,838,739 | 31,305,060 | 1,533,679 |
| | | 12,424,251 | 15,309,361 | 8,552,628 | 6,756,733 | 12,747,522 | 40,403,940 | 36,886,594 | 3,517,346 |

### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹசலக நகரில் நீதிமன்ற கட்டிடத் தொகுதியை நடாத்திச் செல்ல வழங்கப்பட்ட கட்டிடத்திலிருந்து 2001 வருடம் முதல் பெற வேண்டிய ரூபா 103,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரித் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | மணல் துறைகளை குத்தகைக்கு வழங்கியதில் இரு நபர்பளிடமிருந்து 2008 ஜுலை 01 முதல் 2008 திசெம்பர் 31 வரையான கால்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 81,949 வரித் தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஹசலக பொதுச் சந்தை – சந்தை பாதை 04 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 839,834 ஆன கடை வாடகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | அறவிட வேண்டிய வாடகையை உரிய காலத்தில் அறவிட வேண்டும். | வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உடமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அறிவிக்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொதுச் சந்தை – பள்ளேவத்த 4 கடையறைகளிலிருந்து ரூபா 543,999 தொகை அறவிட வேண்டியதாக நிலவியது. ரூபா 110,523 கடையறை வாடகையை அறவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வாடகையை உரிய காலத்தில் அறவிட வேண்டும். | வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உடமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அறிவிக்கிறேன் |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஹசலக கட்டிடத் தொகுதியில் 20 கடையறைகளிலிருந்து ரூபா 5,273,827 ஆன வரித் தொகையொன்று அறவிட வேண்டியதாக இருந்தது. | உடன்படிக்கை பிரகாரம் செயற்பட்டு பணம் அறவிட வேண்டும். | உடமையை சுவீகரித்துக் கொள்ள வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | ஹசலக நகரில் மணிக்கோபுர தள மாடியிலுள்ள அதிஸ்ட சீட்டு விற்பனை குடிலிலிருந்து 2016 ஆண்டு முதல் நிலுவை வாடகை ரூபா 113,250 ஆனது. | இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீடு செய்து மீண்டும் உடன்படிக்கை செய்யுமாறு அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 20,931,160 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 651,650 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரைவாக அழைபித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை | உப விதிகளை விதித்து வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க | ஏற்றுக் கொள்கிறேன். |

| | |
|---|---|
| செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் 13 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | வேண்டும். |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் (out come) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புற எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் ரூபா 59,078,700 செலிவில் நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட பொது நூலகம், தகவல் தொழிநுட்ப மத்திய நிலையம், சுகாதார மத்திய நிலையம், மாதர் மற்றும் ஆயுர்வேத மத்திய நிலையம் மற்றும் சனசமூக நிலையம் போன்றன நிறுவப்பட்டிருக்காததுடன், 2019 திசெம்பர் 31 திகதியன்றும் தளமாடி மற்றும் இரண்டாம் மாடியில் 14000 சதுர அடி அளவு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்பார்த்த விளைநவுகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உக்கலடையும் கழிவுப் பொருட்கள் துண்டு முறை மூலம் இயற்கை பசளை உற்பத்தி செய்யப்பட்ட போதும், விற்பனைக்கான ஒழுங்கு முறை ஒன்று இல்லாததால் பெறுமளவு பசளை குவிக்கப்பட்டிருந்தது. வெளியிட உரிய நிலையிலுள்ள பசளைகள் மழையில் நலையவிடப்பட்டிருந்ததுடன், உற்பத்தி செய்யப்படும் மற்றும் விற்பனை செய்யப்படும் பசளை பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முறையாக பசளை முகாமைதுவத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க பேண்டும். | குப்பை கொட்டிலிற்கு பசளை கொண்டுவரப்பட்டு வகைப்படுத்தப்படுவதாக அறிவிக்கிறேன். உற்பத்தி செய்யப்படும் பசளைகளை கொட்டக்கூடியவகையில் தயார் செய்யப்படுவதாக அறிவிப்பதுடன் பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அதன் காரணமாக அது தொடர்பாக போதிய கடப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 பாதீட்டுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஹசளக வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கைகள் 2009 ஆண்டில் காலாவதியாகி இருந்தன. உடன்படிக்கை படி கடையறை ஒன்றின் அளவு 12 x 29 அடி ஆன போதும், 12 x 60 அடி வரையான அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 13 கடையறை குத்தகைகார்கள் கடையின் பின் பகுதியில் நிரந்தரமாக வசிக்கின்றனர். கட்டிடத் தொகுதியின் மேல் மாடி நிர்மாணம் சபையில் அனுமதியின்றி குத்தகைக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்டிருந்தனர். | அனுமதியற்ற நிரமாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | பல்ளேவத்த பொது சந்தை 2 கடையறைகளிலிருந்து ரூபா 367,887 மற்றும் ஹசளக பொது வியாபார கட்டிடத் தொகுதி 2 கடையறைகளிலிருந்து ரூபா 512,224 அறவிடப்பட்டிருக்காததுடன், இது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதும், குத்தகை உடன்படிக்கை காலம் முடிவடைந்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிட மற்றும் உடமையை சுவீகரிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலோட்டத்தில் வழக்கு தள்ளுபடியாகியுள்ளது. உடமையை மீண்டும் பெற்றுக் கொள்ள வழக்கு தாக்கல் செய்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 7 பதவிகளில் 10 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 02 மிகையும் நிலவின. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள வெண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 04 உத்தியோகத்தர்களின் ரூபா 500,973 ஆன கடன் தொகையை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை. | கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான குடிபானச் சாலையை மதிப்பீடு செய்யாது 06 வருடங்களாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கடையறை இது வரை மதிப்பீடு செய்யப்படாததுடன், 2021 ஆண்டு மதிப்பீடு செய்யது டென்டர் விடுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | நீர் விநியோகிக்கும் வேலைத் திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 98,757 தொகையை மினிப்பே பிரதேச செயலகத்திலிருந்து மீள் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய காலத்தில் பணத்தை மீள் நிரப்பிக் கொள்ள வேண்டும். | இப் பணத்தை மீள் நிரப்பிக்கொள்ள பிரதேச செயலாளரிற்கு கடிதம் சமர்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபைக்கு சொந்தமான நீர் கருத்திட்டங்களில் மாணி பொருத்தாது வீட்டுப் பாவனைக்கு ரூபா 150 மற்றும் வியாபாரத்திற்கு ரூபா 400 அறவிட்டதால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இலக்கப்பட்டுள்ளதுடன் நீர் கிடைப்பதில்லை என அறிவித்து பணம் செலுத்தாமை போன்று உரிய காலத்தில் நீர் கட்டணம் அறவிடாமை போன்ற காரணங்களால் ரூபா 2,522,169 நிலுவை காணப்பட்டது. | நீர் மாணிகளை பொருத்தி நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் மாணி பொருத்துதல் பொருத்தாதல் பற்றிய தகவல்கள் சபையிடம் இல்லை. நீர் மாணி பொருத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹசளக வாராந்த சந்தைக்கு அருகில் சபைக்கு சொந்தமான காணியொன்றில் ஒரு நபரினால் அனுமதியின்றி நிர்மாணித்திருந்த கட்டிடத்தை உடைத்து அகற்றியது தொடர்பான வழக்கை தீர்க்க சபையி 2019 செப்தெம்பர் 25 திகதி ரூபா 535,500 செலுத்தியிருந்தது. இவ்வழக்கு தொடர்பாக நீதிமன்ற பொறுப்பிற்கு எடுக்கப்பட்ட சபைக்கு சொந்தமான ரூபா 1,500,000 பெறுமதியான கெப் வண்டியொன்று துருப்பிடித்துக் காணப்பட்டது. | சொத்துக்களின் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக பொலீஸிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. முன் நடவடிக்கை எடுத்து அறிவிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 பெறுமதியான கெப் வண்டி 2006 ஆண்டில் எஸ்கீஸ் கட்டளையினால் தடை செய்யப்பட்டிருந்ததுடன், வழக்கு தற்போது முடிவடைந்துள்ள போதும் கெப் வண்டி தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கெப் வண்டி தொடர்பாக விரைவில் முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக பரிசீலனை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | ரூபா 1,978,050 பெறுமதியான 03 வாகனங்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவன. | பயன்படுத்த முடியாத வண்டிகளை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுள்ள போதும், பொதுவான அலுவலக நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதால் உள்ளக கணக்காய்வு போதியளவு மேற் கொள்ளப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற் கொண்டு அறிக்கை சமர்பிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |